சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# சைவசித்தாந்தம் காட்டும் மனித விழுமியங்கள் - சில சிந்தனைகள்

நா. ஞானகுமாரன்

மனித வாழ்வானது பல துறையினரின் ஆய்வுக்குரிய கருப்பொருளாகும். மானிடவியல், உளவியல், சமூகவியல் போன்ற பல துறைகளும் மனித விழுமியங்களை அல்லது வாழ்க்கையின் அம்சங்களை ஒவ்வொரு கோணத்திலிருந்து ஆய்வு செய்கின்றன. இவை போலத் தத்துவவியல், சமயவியல் போன்ற துறைகளும் மனித வாழ்வை முதனிலைப்படுத்தி மனித விழுமியங்களை ஆய்வு செய்தலைக் காண்கின்றோம். பிரபஞ்சத்திலுதித்த அனைத்து மானிட ஜீவராசிகளுக்கும் வாழ்க்கை அல்லது வாழ்வனுபவங்கள் என்பது தவிர்க்கப்படமுடியாத வகையில் வந்தமைகின்றன. வாழ்வென்பது பொதுவில் உயிரோட்டமானது அல்லது உயிர்ப்புடையதெனலாம். இவ்வாழ்வானது எவ்வாறு அமைவுறுகின்றது? ஏன் அமைகின்றது? எதற்காக நாம் வாழப்பழக வேண்டும்? எப்படி நாம் வாழ வேண்டும்? எனப் பலவாறாகச் சிந்திக்க முற்பட்ட தன்மையில் பல இயல்களும் கோட்பாடுகளும் மலர்ந்தன. மனிதன் எவ்வாறு வாழ்கின்றான் என்பதனை நுண்ணியதாய்ச் சிந்தித்த தன்மையில் உளவியல் கோட்பாடுகள் உருப்பெறுவதாயிற்று. எப்படி, எப்போக்கில் வாழ்கின்றான் எனச் சிந்திக்கத் தலைப்பட்ட தன்மை யில் சமூகவியல் துறை அமைதாயிற்று. ஏன் எதற்காக வாழ்கின்றான் எனும் கோணத்தில் சிந்தித்ததன் பிரதிபலனாகச் சமயம் சார்ந்த மெய்யியல் விரிவதாயிற்று.

ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மானிட வாழ்க்கை முறையை நெறியாக எடுத்தாண்ட பெருஞ்சமயங்களுள் ஒன்றாக வைத்து எண்ணத்தக்கது சைவ சயமமாகும். சிவனை முழுமுதற் கடவுளெனக் கொண்டு விளங்குகின்ற சைவமானது தொன்மையான வரலாற்றினையும் நற்பண்பாட்டினையும் தன்னகத்தே கொண்டு திகழ்ந்தமையைக் காணலாம். "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்று எடுத்தாளும் வகையில் நீதிநெறி சார்ந்த சமயமாய் தத்துவமாய் விளங்குவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்திய தத்துவ வரலாற்றுப் பாதையில் ஒவ்வொரு தத்துவங்க

ளும் சமயங்களாகத் திகழ்ந்தமை நோக்கு தற்குரியதாகும். இத்தத்துவங்கள் வெறும் சிந்தனைக் கோலங்கள் என்றில்லாது வாழ்வின் செயற்படு முறைமைகளாக விளங்கியமை அவற்றின் சிறப்பமிசங்க ளெனலாம்.

உலக சமயங்கள் அனைத்தும் மானிட வாழ்வின் உயர்விற்கும் வளப்பத் திற்கும் வழிகாட்டும் நிலையில் ஒன்றுபட்டு நிற்கின்றன. இந்நிலையில் இந்தியச் சமய ங்கள் அனைத்தும் மனித வாழ்வினை மேம்படுத்தலையே அடிப்படையாகக் கொண்டு விளங்குவதனைக் காணலாம். மனித வாழ்வின் சீர்மைக்கு வழிகாட்டும் வகையில் சைவத்தை நிலைக்களனாகக் கொண்டெழுந்த சைவசிந்தாந்தமும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்க்கை நெறியாக அமைந்துள்ளது.

சமயமானது ஒவ்வொருவனையும் உயர் நிலைக்கு அழைத்துச் செல்லுகின்ற நெறியை அல்லது மார்க்கத்தைக் காட்டி நிற்கும் வகையில் அவனுக்கு ஒரு வாழ்வு நிலையை எடுத்தாளுகின்றது. இந்த வாழ்வே சமய வாழ்வாக உள்ளது. சமயவாழ்வானது வளர்ச்சி நிலையில் ஒரு சமூகநெறியாக மலர்கின்ற பரிணாமத் தைக் காணலாம். சமயமும் வாழ்வும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உறவு கொண்ட தாக அமைய வாழ்வில் சமய நெறியையும் சமயநெறியில் வாழ்வினையும் கண்டு வக்கத்தக்கதாகச் சைவசித்தாந்தம் திகழ்கின்றமை நுட்பமாக நோக்குவோர் க்குப் புலப்படத்தக்க தொன்றாகும். இவ்வகையில் மனிதனின் சமூக உள நிலைப்பாடுகளுக்கு இயைந்தவகையில் மனிதவாழ்வின் விழுமியங்களை மேம்படுத்தி உயர்ந்த உன்னத நிலையை அடையலாம் என்பதனைச் சித்தாந்தநெறி விளக்கி நிற்கின்றது. இவ்வாறு வழி நடாத்தும் நடைமுறை நெறிக்குரிய ஆதாரச் சிந்தனைகளையும் அடிப்படை உண்மைகளையும் தத்துவங்கள் எடுத்து விளக்குவனவாக அமைந்துள்ளன. சைவ சித்தாந்த தத்துவமும் சமயமும் ஒன்றினை ஒன்று பரஸ்பரம் இணைந்து வாழ்வினை வளப்படுத்தும் வழிவகை களை வழங்கு வது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் சைவசித்தாந்தம் வைதிக தர்மமாகவும் சனாதன தர்மமாகவும் எடுத்தாளத் தக்கதாகின்றது. அதாவது வேதநெறியை ஏற்று நிற்கின்றவகையில் வைதிக தர்மமா கவும் நிலையான தன்மையுடைத்தெனும் வகையில் சனாதன தர்மமாகவும் அமைகின்றது எனில் தவறில்லை.

சிந்தாந்தமானது சிவனை முழுமுதற் பொருளாக ஏற்பதுடன் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை விளக்கி நிற்கும் தத்துவ நெறியாகும். ஒப்புயர்வற்ற உண்மைப் பொருளான சிவத்தை அடைவதையே சைவசித்தாந்தம் மனித வாழ்வின் உயர்ந்த இலட்சியமாக எடுத்தாளுகின்றது. மனித ஜீவராசிகள் அறியாமை எனும் பந்தத்திற்குட்பட்டு வாழ்க்கையின் உயர்வான இலக்கினை அறியாது துயருறுகின்றன. இத்துயரிலிரு ந்து விலகி நெறிமுறையான நல்வாழ்வினை வாழ்வதற்கான வாழ்க்கை நெறியினைச் சித்தாந்தம் வழங்குகின்றது.

பொதுவாக, மனித சமூகத்தின் பண்பாட்டின் வளர்ச்சிக்கு சமயங்கள் வழிகாட்டி வருகின்றமை நோக்கத்தக்க தாகும். இறைவனை ஏற்று நிற்கின்ற வைதிக சமயங்களாயினும் சரி, அன்றேல் இறைவனின் இருப்பை நிராகரித்து நிற்கின்ற உலகாயதம் தவிர்ந்த அவைதிக சமயங்களாயினுஞ் சரி. இவை மனித

சமுகத்தில் ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் வலியுறுத்தி நிற்பதில் பின்னிற்கவில்லை. இறைவனை ஏற்று நிற்கின்ற சைவசித்தாந்தமானது முழுமுதல் இறைவனான சிவன் சகல நற்சம்பத்துக்களும் நிறைந்தவனாக எடுத்தாளுவதுடன் அவை எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த பூரணமானவனாகச் சுட்டி நிற்கின்றது. இறைவனின் மேன்மை, பூரணத்தன்மை ஆகியன சுட்டும் முகத்தால் ஒப்பீட்டடிப் படையில் எமது பூரணமின்மை, இயலாத்தன்மைகள் வழி எமது உண்மைநிலையினை உணர வைக்கும் தகைமை உய்த்துணரற்பால தாகும்.

இறைவனை நாடும் பாங்கில் மக்களை ஒழுக்கம் சார்ந்த வாழ்விற்கு வழிப்படுத்துவதில் சமயங்கள் பெரும் வெற்றியடைந்துள்ளமையினை அவைகள் காட்டிநிற்கின்ற பண்பாட்டுக் கோலங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. உயர்வானதொரு வாழ்வு அல்லது பூரணமான வாழ்வு என்பது ஒழுங்குக்குட்பட்டதான அறவாழ்வென்பதனைச் சித்தாந்தம் சுட்டி நிற்கின்றது. மனித வாழ்வில் ஒழுக்கத்தின் முதன்மை எந்தவொரு நெறிமுறைகளாலும் அலட்சியப் படுத்தப் படக்கூடாது என்பதற்கு தக்கவொரு உதாரணமாக சார்வாகத் தத்துவத்திற்கு ஏற்பட்ட முடிவினைக் கூறலாம். ஒழுக்கத்தினை முதன்மைப் படுத்தும் வகையிலேயே வள்ளுவப் பெருந்தகையும் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என எடுத்தாண்டமை காணலாம். 1 இறைவனின் இருப்பினை நிராகரித்து நிற்கும் சமணம் பௌத்தம் ஆகிய சமயங்கள் கூட ஒழுக்க நிலைப் பாடுகளின் அடிப்படையிலேயே மனித நேயத்தினையும் உயர்வினையும் வளர்க்க முற்படுகின்றமையைக் காண்கின்றோம். ஒழுக்கம் மனித வாழ்க்கையினை வளம் படுத்திச் சீர்மைப் படுத்துகின்ற வேளை சமயதத்துவங்கள் ஒழுக்கத்தினைத் தம்மினின்றும் வேறுபடுத்தாது இணைத்துச் செல்கின்ற தன்மை குறிப்பிடத்தக்கதாகும்.

அரிதான மானிடப் பிறவியானது மற்ற ஜீவராசிகளினின்றும் மேன்மையுடையதாய் பகுத்தறிவு எனும் ஆறறிவு கொண்டதாய் அமைந்துள்ளது. பகுத்தறிவினைச் சிறப்புறக் கொண்டு தனது வாழ்க்கை பற்றி ஆய்ந்தறிந்து கொண்டு ஒழுங்குபடுத்தும் வல்லமை கொண்டவனாக மனிதன் விளங்குகின்றான். இத்தன்மை கருதியே திருஞான சம்பந்தரும் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை" என எடுத்தாளுதல் நோக்கத்தக்கது. 2 இவ்வகையில் வாழ்வானது நல்ல வகையில் வாழுதல் சாத்தியம் என்பதைப் புலப்படுத்துவது மாத்திரமின்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என வள்ளுவர் சுட்டுவது போல மனிதன் உயர்ந்த நிலைக்குரியவனாக ஏற்றிப் போற்றப் படத்தக்கவனாகின்றான். 3 இவ்வாறான உயர்நிலை கருதியே ஔவைப்பிராட்டியும் ஞானமும் கல்வியும் தானமும் தவமுந்தான் செய்வாராயின் வானவர் நாடு வழி திறந்திடுமே எனக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். 4 சீர்மையாக வாழ்பவன் உயர்நிலைக்கு உரியவனாக உவமித்துக் கூறப்படுவது நெறிமுறையான வாழ்வின் சிறப்பினை மேன்மையைச் சுட்டப் போதியதாகும்.

இறைவனைச் சுட்டி நிற்காத இறையில் மதங்களும் ஒழுக்கத்தினையே இறைவனை அடைவது போன்ற பூரணப் பொருளாக எடுத்தாள்கின்றன. ஆனால்

சிந்தாந்தம் போன்ற சமயங்கள் இறைவனுக்கு ஒழுக்க நிலையினை அளித்து ஒழுக்க நிலைசார்ந்த இறைவனை அடைதலே வாழ்வின் பூரணத்துவம் எனச் சுட்டி நிற்கின்றன. இவ் வகையில் நல்வாழ்வினை அறவாழ்வாகக் காட்டி அவ்வாழ்வினை அடைதற்குரிய நெறியினைக் கூறும் சிந்தாந்தம் ஒவ்வொரு மனிதனின் சமூக உளப்பாங்கிற்கமைய எடுத்தாண்டமை மனங்கொள்ளத்தக்கதாகும்.

மனித வாழ்வை இல்வாழ்வு, துறவுவாழ்வு என இருநிலைப்பட்டதாகப் பகுத்து நோக்கலாம். இல்லாள் எனும் மனையாளோடு இணைத்து வாழ்வது இல்வாழ்க்கை. அடுத்து இல்லத்தை விட்டுத் துறந்து வாழ்வது துறவு வாழ்வாகும். முன்னையது ஆசாபாசங்களுடன் கலந்து உலகப் பற்றோடு இணைந்து அமையும் வாழ்க்கை நெறியாக விளங்கப் பின்னையது உலகப் பற்றுக்களினின்றும் துறந்த நிலையில் அமையும் வாழ்வு நிலையாகும். இல்வாழ்வு துறவு வாழ்வு ஆகிய இரண்டும் இல்லறம், துறவறம் என அறவாழ்வாய் எடுத்தாளுகின்ற வகையில் இருநெறிகளும் அற நெறிகளாய்ச் சுட்டப் பெறுகின்றன. பொய்யா மொழிப் புலவன் கூட அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என அழுத்திச் சொல்வதும் இங்கு நோக்கத்தக்கதாகும். எனவே இவ் வாழ்வானது வாழப்படுகின்ற முறையிலே நல்லறமாய் மிளிர்கின்ற தன்மை நுட்பமாய் அமைகின்றது. இதனையே அருணந்தி சிவாச்சரியார், "ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உறவு சீலம் / தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை / அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி / இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணியறங்கள்" என எடுத்தாளுதல் காணலாம்.

5 மனிதன் ஆற்றுகின்ற அகநிலை சார்ந்த நடத்தைகளும் புற நிலை சார்ந்த நடத்தைகளும் அறநிலை சார்ந்தவையாக அமைகின்ற வேளையிலேயே அவை உயர்நிலைக்குரியதாய் இறைவனின் கருணைக்குரியவையாக அமைகின்றன. அன்பு, அருள், அடக்கம், வாய்மை, துறவு ஆகியவை பெரிதும் அகநிலை சார்ந்த மனிதப் பண்பாக விளங்குகின்றன. இப்பண்புகள் கைவரப் பெற்றவன் மனிதநேயமும் ஒழுக்கமும் கொண்ட பண்பாளனாக அமைவுறுகின்றான். இப் பண்புகள் இணைந்தவனின் வணங்கல், வந்தித்தல், அறிவோடு அர்ச்சித்தல், தானங்கள் போன்ற நடத்தைகளும் அறநிலைக்குரித்தாகின்றன. இதனாலேயே சமய வாழ்வில் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் சித்தாந்தம் வேண்டுவது நல்லொழுக்கத்தையே தவிர வெறும் சம்பிரதாயங்கள் சடங்குகளை மட்டுமல்ல என்பது வெள்ளிடைமலை. இங்கு உண்மைச் சமயம் வேண்டுவது நன்னடத்தையே தவிர சடங்குகள் அல்ல என இராதா கிருஷ்ணனின் கூற்று வலியுறுத்தி நிற்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும். ஆனால் சடங்குகள் சம்பிரதாயங்கள் நல்லொழுக்க த்தினை நிலைநாட்டவும் மேன்மையுறவும் உதவுமாயின் அவை தொடர்ந்து நன்மை பயப்பாதாகும். நன்னடத்தை விதிகளைப் பொதுவில் மக்கள் அறிந்து கொள்வது இலகுவானதன்று. மேலும் தத்துவவிசாரம் மக்கள் எல்லோருக்கும் எளிதானதுமன்று. இவ்விடத்து சடங்கு சம்பிரதாயங்களுடாக நல்லொழுக்கப் போதனைகள் பேணப்படுமாயின் அவை வரவேற்கப்பட வேண்டியவையாகும்.

முடிந்த முடிபை மூலப்பொருள் உண்மை நிலையில் எடுத்துரைக்கும் சித்தாந்தமாகச் சைவசிந்தாந்தம் திகழ்கின்றது. பதி, பசு, பாசம் எனும் மூன்று பொருட்களும் உள்ள பொருட்களாக எடுத்தாள்வதுடன் இம்மூன்று பொருள்களுக்கிடையிலான தத்துவார்த்த உறவினைத் தர்க்க நிலையில் விளக்கி நிற்கும் வகையில் சிறந்ததொரு தத்துவமான, மெய்யியலாக அமைந்துள்ளமை காணலாம். பதியான சிவன் இயல்பு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் சொரூப சிவனாக அல்லது பரமசிவனாகவும் பொதுநிலையில் குணங்களோடு கூடிய தடத்த நிலைச் சிவனாகவும் எடுத்தாளப்படுகின்றான். இங்கு பரமசிவன் உயர்நிலைச் சார்ந்த எண்ணக் கருத்தாக விளங்குவதுடன் தத்துவார்த்தப் பொருளாகவும் அமைவுறுகின்றான். அதேவேளை பசுவினதும் உயர்வு நாடும் தரத்ததாகத் தடத்த நிலைச் சிவனானவன் குணம், தொழில் எனும் பண்பினை ஏற்று நாம ரூப நிலைக்குரிய வழிபாட்டுத் தெய்வமாக விளக்கப்படுகின்றான். பசுத் தன்மை கொண்ட மானிட ஆன்மாக்களின் உயர்நிலை நாடற்குரிய இலக்காகப் பதி அமைகின்றது. எனினும் சார்ந்ததன் வண்ணம் விளங்கும் தன்மை கொண்ட பசு பாசமென எடுத்தாளப்பெறும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலங்களின் பிணைப்பினால் தன்னிலை தளர்ந்து உலகியல் வாழ்வில் அல்லல் நிலைக் குரியதாய் அமைவுறுகின்றது. ஆசை, அகம்பாவம், மோகம் எனும் மும்மலங்களின் பிணைப்பினால் தன்னிலை தளர்ந்து உலகியல்வாழ்வில் அல்லல் நிலைக்குரியதாய் அமைவுறுகின்றது. நிலைத்தரங்களை மலங்களின் பிடிப்பினால் பெற்றுப் கொள்ளுகின்ற ஆன்மாக்கள் வாழ்க்கையின் கோலங்களில் சிறைப்பட்டுத் துன்புறுகின்றன. ஆசை, அவா, போகம், மோகம் போன்ற விழைவுகள் புலனுணர்வுக்குரிய உலகியல் நாட்டங்களில் ஆன்மாக்களினை வழிநடாத்துகின்றன. அவற்றோடு ஆணவம் மலத்தின் பிடிப்பு மமதை, அகங்காரம் போன்ற அகம்பாவ உணர்வின் வழி எழும் குணவியல்புகளையும் மனித நடத்தையில் பிரதிபலிக்கச் செய்வனவாகின்றன. இவ்வாறான உளப்பாங்குகளின் செல்வாக்கு மனித நடத்தைகளை முரண்படுத்தி ஒழுக்க நிலைக்கு அப்பாற்பட்ட பாதைக்கு வழிகாட்டுவதாய் அமைந்துவிடுகின்றது. இங்குதான் சமயம் சார்ந்த நெறிமுறைகள் மனிதனை மனிதப் பண்புடையவனாக வாழ வழிகாட்டும் தரத்ததாக அமைவதனைக் காண்கிறோம். வாழ்வின் நோக்கினையும் ஆன்மாவின் அடிப்படையான இயல்பினையும் தெளிவாக்குவதன் வழி ஆன்மாக்களினைத் தூய பாதையில் வழிகாட்டுவதுடன் புனிதமான சிந்தனையில் மேன்மைப்படுத்தவும் சாத்தியமாகின்றது.

அன்றாட வாழ்வானது இன்பம், துன்பம் ஆகிய உணர்வோடு இணைந்ததாகப் பெரும்பாலானோர் வாழ்வில் அமைந்துள்ளதைக் காணலாம். சிறுபிராயத்திலிருந்து எமது வாழ்வின் போக்கும் நோக்கும் மாறுபட்டு வளர்ந்து வருவதனை நுணுகி ஆராயுமிடத்துக் காணலாம். தொழில் நுட்பம் மிகுந்த இன்றைய விஞ்ஞான யுகத்தில் பல்வேறான வசதிகளும் வாய்ப்புகளும் வாழ்வினை அலங்கரிகின்ற போதிலும் வாழ்க்கையின் போக்கு பூரண திருப்தி அளிப்பதனை பொதுவில் காணமுடிவதில்லை. நிம்மதியை நாடி மனம் அடிக்கடி அங்கலாய்

ப்பது மனித வாழ்வில் பல்வேறான நிலைத் தரங்களிலும் அமைவுறுவதனை நிதர்சனமாகக் காண்கின்றோம். வாழ்க்கையில் அமைகின்ற ஆசாபாசங்களோ ஆடம்பர வசதிகளோ நிலையான நிம்மதியான வாழ்வினை இவ்வுலகப் பொருட்களின் அரவணைப்பினால் திருப்தி அளிக்க முடியாமற் போய்விடுகின்றமை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தெளிவிற்குரியதாகின்றது. அவ்வேளைகளில்தான் திருப்திக்கான விளைவினைச் சமயங்கள் காட்டி நிற்பது குறிப்பிடத் தக்கதாகும். இக்கருத்துச் சாயலைப் பிரதிபலிப்பது போலவே பொய்யா மொழிப் புலவனும் "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தாற் கல்லால் மனக்கவலை மாற்றலரிது" என மனதின் கவலையை மாற்றுவதற்கு இறையியல் காட்டி நிற்கும் இறைவனை அடைதலே வழியாகுமென விளக்கி நிற்பதைக் காண்கின்றோம். [6] மனிதனினுள் அடங்கியுள்ள ஈடேற்றத்தைப் பெறவிழைகின்ற ஓர் அவா அல்லது உந்துதலின் பிரதிபலிப்பே சமயம் எனக் குறிப்பிடும் வகையில் சிந்தாந்தம் விளங்குகின்றது. இவ்வுந்துதல் வழியே துன்பமும், அல்லலும் நிறைந்த வாழ்வின் நிரந்தரமின்மையினின்றும் ஈடேற்றமான கட்டுப்பாடற்ற நிர்ணயமற்ற இடத்தை அடைதல் சாத்தியமாகின்றது. நிரந்தரமற்ற இவ்வுலகின் எப்பொருளும் அவனுக்கு நிரந்தரமான திருப்தியை அல்லது மகிழ்ச்சியை அல்லது அமைதியை அளிக்க முடிவதில்லை. இத்தன்மை தான் நீரில் குமிழி போல் நிலையற்ற வாழ்வை விட்டு உன் பேரிற் கருணை வெள்ளம் பெருக்கெடுப்பது எக்காலம் எனப் பாரதியாரைக் கேட்க வைக்கின்றது. [7] இவ் உணர்வே திருஞான சம்பந்தரையும் "வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்" எனப்பாட வைத்தமையைக் காண்கின்றோம். [8] நிரந்தரமான இன்பத்தை, நிலையான நிம்மதியை, சாந்தியை, அமைதியை பெறுவதற்குரிய வழிமுறையை இது காட்டி நிற்கின்றமை நோக்குதற்குரியதாகும். இதனையே வாழ்வு பற்றிய தத்துவ விசாரம் என இராதாகிருஷ்ணன் எடுத்தாள்வதும் குறிப்பிடத்தக்கதாகின்றது.

அறமென எடுத்தாளப்படும் வகையில் தர்மம், ஒழுக்கம், நீதி சார்ந்ததாக, வாழ்வு அமைவுறுகின்றது. கர்மம் என்பது வினை அல்லது செயல் எனப்படும். சித்தாந்தத்தின்படி வினையும் வினையின் பயனும் கர்மமாகின்றது. பிறந்த மானிட ஜீவராசிகள் பிறந்த கணம் முதல் வினையாற்றி வருதல் காண்கின்றோம். வினையின்றி ஒரு கணமும் சும்மா இருக்க முடிவதில்லை. சும்மா இருப்பது என்பது வினையை விடுத்து இருக்க முயல்வதான ஓர் உயரிய நிலையாகும். ஆன்மாக்களின் பக்குவ உயர் நிலையிலேயே இது சாத்தியமாகுமென்பது தெளிவு. அவ்வாறன்றி நாம் பேசுவதும் நினைப்பதும் நடப்பதுவும் ஏன், சும்மா இருக்கின்றோம் என நினைப்பதும் வினைகளாகவே அமைகின்றன. வினைகளின் தராதரங்களிற்கு ஏற்ப அவை நல்வினைகளாகவும் தீய வினைகளாகவும் எடுத்தாளப் பெறும். வினைகளின் பலாபலனுக்கமையவே மனிதவாழ்வின் உயர்ச்சியும் தாழ்ச்சியும் தீர்மானிக்கப் பெறுவதாக எடுத்தாளப் பெறுகின்றது. மறுவார்த்தையில் கூறின் எமது கர்மத்தின் விளைவே எமது தர்மத்தின் நிலையினைத் தீர்மானிக்கும் ஏதுவாகின்றது. இவ்வகையில் சைவசித்தாந்தமானது மனிதவாழ்வில் நல்நடத்தையை

வளர்க்கவல்ல தர்மத்தைக் காட்டிநிற்கின்ற தன்மையை காணலாம். உண்மைச் சமயங்கள் நல்நடத்தையை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றனவே தவிர வெறும் சடங்காசாரங் களை அல்ல வென்பது தெளிவிற்குரிய தாகும். அதேவேளை நல்ல நடத்தையை உருவாக்குவதில் சமயாசார சடங்கு சம்பிரதாயங்கள் உதவுவதாயின் நன்றே என்பது மனங்கொளத்தக்கது. இவ்வகையில் சடங்காசாரங்களும் நுட்பமான வகையில் மனித சமூகத்தில் நல்நடத்தைக்கு உந்து சத்திகளாக விளங்குவது நல்வாழ்க்கை முறையின் இருப்பிற்கு ஆதாரங்களாகின்றன.

ஒவ்வொருவரும் ஆற்றுகின்ற நடத்தைகள் ஒழுக்க விழுமியங்களை எடுத்தாள்வதாய் அமைகின்றன. இதனால் ஆற்றப்படும் செயல்கள் நல்லொழுக்கமாய், தீயவொழுக்கமாய் அமைவுறுகின்றன. ஒழுக்கததிற்கு அழுத்தம் கொடுத்து எச்செயலையும் நற்செயலாக வழிப்படுத்தப் பலவழிகள் சித்தாந்தத்தில் சுட்டப் பெறுகின்றன. ஒழுக்கத்திற்கு அளிக்கப்படும் முதன்மை கருதியே சுந்தரமூர்த்தி நாயனாரும் "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் பாழ்போவது பிறவிக்கடல் பசி நோய் செய்த பறிதான் தாழாது அறஞ் செய்மின்" என அறைகூவல் விடுக்கின்றமை காணலாம்.[9] வாழ்வின் நிலையாமைத் தன்மை விரவிக் காணப்படுகின்ற போதிலும் அறத்திற்கு முதன்மை அளித்து அறஞ்செய்மின் என அழுத்தங் கொடுத்தமைப்பது அதன் காத்திரத் தன்மையைப் புலப்படுத்து கின்றது. சமய வாழ்விற்கு வரைவிலக்கணம் அளிக்கப் புகுந்த மத்தியூ ஆனல்ட் எனுமறிஞர் பத்தியுடன் கூடிய அறவொழுக்கமே சமயமாகுமென்றார். சைவ சித்தாந்தமும் முழுமுதற் பொருளான சிவனை ஒழுக்க நிலை கொண்ட குணவாளனாக எடுத்தாள்கின்றது. அனைத்து நற்குணங்களும் வாய்க்கப் பெற்ற குணசீலனாய் சிவன் சுட்டப்படுவதுடன் அத்தெய்வீக குணத்தானை அடைதலே வாழ்வின் இறுதி இலட்சியமாய், இலக்காய் அமைகின்றது.

மனித வாழ்வில் அடையத்தக்கவையாக தர்மம், அர்த்தம், காமம் மோட்சம் எனும் நான்கு புருஷார்த்தங்கள் சுட்டப்பெறுகின்றன. தர்மம் முறையான நடத்தையைச் சுட்டுவதாகும். மனு, சுக்கிராச்சாரியார் போன்றோரும் தர்மம் பற்றி எடுத்தாண்டிருந்தனர். தர்மமானது நடத்தைகளை ஒழுங்குபடுத்திச் சமூகவாழ்வினதும் ஆன்மீக வாழ்வினதும் உயர்வுக்கு வழிகாட்டுகின்றது. தர்மம், வர்ண தர்மம், ஆச்சிரம தர்மம் ஆகச் சுட்டப் பெறுவதுடன் இவைபற்றிய எண்ணக் கருத்துக்கள் பகவக்கீதை, சைவசமயநெறி, சைவ பரிபாஷை போன்ற நூல்களிலும் இடம்பெறுகின்றன. வர்ண தர்மமானது சமூகநிலை சார்ந்த நிலைப்பாடாகவும் ஆச்சிரம தர்மமானது தனிமனித நிலை சார்ந்ததாகவும் கொள்ளத்தக்கது. முன்னையது சமூவியல் சார்ந்த நிலையிலும் பின்னையது உளப்பாங்கு சார்ந்த நிலையிலும் விளக்கத்தக்கதாகும். சமூகத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு எழுந்த சமூக தர்ம அமைப்பாகவும் அதன் பிரதிபலிப்பாகக் கல்வியாளர், ஆட்சியாளர், சமூகப்பாதுகாவலர், பொருளாதார வர்த்தகத்தினர், சகலருக்கும் உதவும் உடலுழைப்பாளர் எனும் பகுப்பில் நோக்கத்தக்கதாகவும் வர்ண தர்மப்பகுப்பு அமைந்திருந்தது. ஆச்சிரம

தர்மமானது மனித வாழ்க்கையில் வாழ்கின்ற படித்தரப் பருவங்களின் தரத்திற்குரியதாகவும் தனிநிலை நெறிக் குரியதாகவும் அமைந்தது. இவ்வாச்சிரம தர்மமானது மனித உளப்பாங்கில் மன, உடல் சார்ந்த சுயகட்டுப்பாடு, சிந்தனை வளம்படுத்தல், உடலியல் உணர்வுகளைச் செம்மைப் படுத்தல், தனிமையுணர்வு கூட்டுணர்வு போன்ற உளம் சார்ந்த நடத்தைகளை முறைப்படுத்துகின்ற நெறி முறைகளாக விளங்குகின்றன. இவ்வா றான ஆச்சிரம தர்மத்தினைப் படி முறையில் கைக்கொள்கின்றவன் மனித வாழ்வில் உயர்ந்த ஈடேற்ற நிலையை, ஞான நிலையைக் கைக் கொண்டவனா கின்றான்.

அர்த்தமென்பது பொருளீட்டலைக் குறிக்கும். சரியான நடத்தையுடன் கூடிய பொருள் வாழ்க்கைக்குப் பயனளிப்ப தாகும். அர்த்தம் மனிதனின் பொருளா தார ஸ்திர நிலைசார்ந்ததாகவும் அமைகி ன்றது. பொருளீட்டுதலே வாழ்வாக இல்லாவிடினும் வாழ்வின் வளப்பத்திற்கு அர்த்தம் எடுத்தாளப் படுகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடல் இறைவழிபாட்டின் போது மக்களிடம் எழும் வேண்டுதலில், ......... யாம் இரப்பவை

"பொருளும் பொன்னும் போகமும்
அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் ........."

என அமையும் தன்மையை நோக்குகை யில் வாழ்வின் சிறப்பிற்கு பொருள்சார்ந்த நிலைவிடுத்து அன்பு, அறம் பெறும் இடத்திற்கு அழுத்தம் கொடுத்திருப்பது மனங்கொள்ளத்தக்க தாகின்றது. காமம் என்னும் புருஷார்த்தமும் அன்பின் ஆழத் தைப் புலப்படுத்துவதுடன் வாழ்வில் எழுகின்ற உறவுகளின் அடிப்படைக்கும் ஏதுவாகின்றது. நெறிமுறைக்குட்பட்ட உறவுநிலை சிவசக்தியின் இணைவு நிலையின் காத்திரத் தன்மையைப் புலப்படுத்தப் போதியதாகும். புருஷார்த் தத்தில் இறுதியானது மோட்சமாகும். இது ஆன்மீக விடுதலை என்றும் ஆன்மா இறைவனடி சேருகின்ற பேரின்பப் பெருநிலை என்றும் சுட்டப்பெறுகின்றது. மோட்ச நிலை நாடும் மனிதன் தர்மத் தைப் பேண வேண்டியவனாவான். மேலும் தமது இச்சைகள் சிலவற்றைக் கட்டுப் படுத்தி ஒழுங்குமுறைக்குரிய சிந்தனை வழி ஆன்மீக வாழ்வில் உயர்நிலையான விடுதலையை அண்மிக் கின்றவனாகின்றான். ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக வாழ்வை வாழ முயலுகின்றபோதே அவன் வாழ்க்கை வாழ்பவனாகின்றான் என இராதா கிருஷ்ணன் சுட்டுவது இங்கு பொருள் பொதிந்ததாகின்றது.

சைவசிந்தாந்தமானது மனித மனத் தைப் புனிதமாக்க நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் பெரும் பணியாற்றுகின்றது. இறைவழிபாடு, தியானம், விரதம், நோன்பு போன்ற சமயாசாரச் செயல்கள் ஒவ்வொருவ ரது உளப்பக்குவத்தின் உயர்வுக்குப் பெரிதும் உதவல்லதாகும். இறைவழி பாடென்பது பொதுவில் ஒரு புறச்செயலாகக் கருதப்படக்கூடியது. எனினும் அச்செயல் எம்மை அறியாதே எமக்குள் ஏற்படுத்தும் உளத்தாக்கங்கள் நுட்பமானவையாகும். இறைவனை இருகரம் கூப்பிவணங்குதல் என்பது வெறுமனே இறைவனைத்தான் வணங்குதல் என்பதாகாது. அதற்கும் அப்பால் மேலான ஒருவன் உளன் என்பதனை உளத்திடையே கொண்டு

அவனுக்கு அடங்கிய உள்ளமையை உள்ளூர ஏற்று அவனுக்கு அளிக்கும் வணக்கம், பணிவு, அன்பு எனும் உயரிய பண்பு களை எமையறியாது எமக்குள் வளர்க்கின்ற வணக்கமாகின்றது. மேலும் பொதுவில் அடங்காது அல்லல்படுத்துகின்ற தற்செருக்கு, மமதை, கர்வம், ஆணவம் ஆகிய குணவியல்புகளினை அடக்கி நிற்கின்ற பக்குவத்திற்கும் வணக்க மாகின்றது. இவ்வகையில் வழிபாடானது எமையறியாமலேயே எமது மனநிலையினை மாற்றி மனத்தின் குணவியல்பினை வளப்படுத்தும் தன்மை கொண்டமைந்தது சிறப்பிற்குரியதாகும். இதனால்தான் இறைவணக்கத்தை மேற்கொள்ளுகின்றவன் உண்மையில் பணிவடிப்படையில் பண்பாளனாயும் பக்தியாளனாயும் விளங்குதல் சாத்தியமாகின்றது.

இத்தன்மையின் அடிப்படையிலேயே உமாபதிசிவாசாரியார்,

"கிரியையென மருவுமவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என்கின்றார்."

இவ்வகையில் புறநிலை நடத்தையின் கூறானது அகநிலையில் எம்மை உயர்நிலைக்கு இட்டுச் செல்லவல்லது என்பது சித்தாந்தம் காட்டும் வாழ்வு நிலையில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நெறியைப் பின்பற்றியோரில் சிலர் காயத்தையே கோயிலாக்கிக் கடிமனதை யடிமையாக்கி வாழ்ந்து உயர்நிலையை உய்த்தனர். சிந்தாந்தம் காட்டும் வாழ்வானது ஊரறிய உலகறியப் பிறர் போற்றப் புகழும் வாழ்வன்று. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமாகவே அது அமைந்துள்ளது. எவ்வெவ் வழிகளின் மூலம் உங்கள் மனத்தைத் தூய்மையானதாக்க முடியுமோ அவ்வவ் வழிவகை களை மேற்கொண்டு வாழச் சிந்தாந்தம் சில மார்க்கங்களை எடுத்தாளுகின்றது. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்ற நாட்டமே சித்தாந்தம் எனும் போது சைவ சித்தாந்தம் அறவாழ்வினை ஆன்மீக வாழ்வாக மலர வழிகாட்டுகின்றது. இங்கு ஆன்மீக வாழ்வு அறவாழ்வுக்கும் அறவாழ்வு ஆன்மீக வாழ்வுக்கும் பரஸ்பரம் உதவுவதாகின்றது. வாழ்க்கையில் அன்பு, அறம், ஞானம் ஆகியனவற்றின் வளர்ச்சி ஆன்மீக வாழ்வின் முதிர்ச்சிக்கு உதவுகின்றன. சிவன் எனும் உயர்ந்த நிலையை நாடும் முயற்சியில் ஆன்மீக வாழ்வானது மனித வாழ்வைப் பலவகைகளில் சீர்மைப் படுத்துகின்றது.

வாழ்வில் இன்பமே உயிர்களின் நாட்டமாகவுள்ளது. இதுவே சமுதாய நோக்காகவும் விளங்குகின்றது. இன்பத்தை அடையும் ஆர்வத்தில் மனிதன் தீமைகளையும், தீங்கான வழிகளையும் சிலவேளைகளில் தேட நேர்ந்திடுகின்றது. சித்தாந்தம் இன்பத்தை அடையும் நெறியாக அறத்தையும் அன்பையும் இணைத்துரைக்கின்றது. இன்பத்தை அருளுகின்ற மலையாக, இன்பப்பெம்மானாக சிவனை மணிவாசகப் பெருந்தகை சுட்டுதல் காணுதற்குரியது. இன்பத்தை துய்ப்பதற்கு உரியநெறி முறையை நாடவேண்டியது அவரவர் கடனாகின்றது. இறைவன் அன்புமயமானவன் அன்பே கடவுள் என அழைக்கின்ற கூற்றுக்கள் அன்பையும் கடவுளையும் ஒன்றாக்குகின்றன. அன்பே சிவன் என சிவத்தை அன்பால் கண்டுய்ப்பதுடன் சிவன் அன்பு என்பன இருவேறுபட்ட பொருளாக நோக்காத தனமை திருமூலர் வாக்கில் தெளிவாகின்றது.12

இங்கு அன்பே வடிவாய் சிவமிருப்

பதும் சிவத்துள் அன்பைக் காண்பதும் நயக்கத்தக்கதாகின்றது. இவ்வாறான அன்பு மனப்பான்மையை ஒவ்வொரு வரும் அடையப் பெறுவது இலகுவானதன்று. மனித வாழ்வில் தம்மவர்களோடும் சமூகத்தோடும் அன்பாய் வாழ்வதற்குச் சமயவாழ்வானது வழி காட்டுகின்றது. வாழ்க்கையில் உயர்ந்த உன்னத நிலையை அடைதலே ஒவ்வொரு ஜீவராசிகளினதும் இறுதி இலக்காகும். வாழ்க்கையின் உயர்ந்த நிலையாக இறைவனடி சாருகின்ற பேரின்பப் பெருநிலையை மோட்சமென அழைத்து நிற்பர். இந்நிலையை அடைப்பதற்குரிய எளியநெறிகளாக நான்கு மார்க்கங்களைச் சிந்தாந்தம் செப்புகின்றது. மக்கள் எல்லோரையும் ஒரே வழியில் வழிப்படுத்துவதென்பது சாத்தியமானதன்று. மனிதர் கள் பல்வேறான இயல்புகள், போக்குகள் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அவரவர் விழைவிற்கும் இயல்பிற்கும் ஏற்புடைய வகையில் அவர்களை நன்னிலைப்படுததும் மார்க்கங்களாக இவை அமைந்துள்ளன.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்கள் இறைவனை அடைவதற்குரிய வழிவகைகளாகும். சரியையானது பக்தியுடன் சிவாலயங்களில் ஆற்றும் செயல்நெறிகளைக் கொண்டது. சரியாபாதத்தில் ஆற்றும் வினைகள் எளிமையானவையாய் புறநிலை வயத்ததாய் அமைந்துள்ளன. அத்துடன் சிவனை அடியவர்கள் உருவத்திருமேனியாய் கண்டுவக்கும் தரத்ததாகின்றது. கிரியை மார்க்கமானது இறைவனை உள்ளன்போடு நினைத்து வேதாகம விதிப்படி ஆற்றும் செயற்பாடுகளைக் கொண்டது. இங்கு கிரியையானது புறத் தொழில், அகத் தொழில் எனும் இருநிலைத் தன்மை கொண்டு சிவனின், அருவுருவத் திரு மேனியை வழிபாட்டினின்று வேறாய் மேம்பாடுடையதாய் கிரியைநெறி அமைதல் தெளிவு. இவ்வகையில் இவர்கள் ஆன்மீக வாழவனுபவம் தீவிரமென்பது வெளிப்படையானது. பஞ்சேந்திரியங்களின் வழியிலே மனதைச் செல்லவிடாது ஒருவழிப்படுத்தி நிஷ்டை கூடியிருப்பதே யோகமாகும். முன்கண்ட சரியை, கிரியையிலும் பார்க்க இந்நெறி தீவிரமானதாய் மனத்தின் பக்குவநிலைக்கு முதன்மையளித்து சிவனை அருவத்திரு மேனி நிலையில் வழிபடுதலை எடுத்தாளுவதாய் அமைசின்றது. ஞானாசாரியருடைய அனுக்கிரகத்தினால் அஞ்ஞானம் அகன்று பதி, பசு, பாசம் எனும் மார்க்கங்கள் ஒரு வகையில் ஒரு படித்தர வளர்ச்சியெனக் கூறத்தக்கதாகும். ஞானம் இவற்றினின்று வேறுபட்டு முத்திறமேனி கடந்த சச்சிதானந்த சொரூபசிவனை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனும் நான்கு நிலையில் கண்டு சிவனிடத்து ஒன்று சேர்தலுக்கு வழிவகுக்கும். இதனாலேயே சரியை கிரியை யோகஞ் செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர். .............. என அருணந்தி சிவாச்சாரியார் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. 13 ஞானத் தின் வழி சாயுச்சியம் எனும் மேலான பதத்தை ஆன்மாக்கள் கைவரப் பெறுவர் எனச் சித்தாந்தம் எடுத்துரைக்கும். நான்கு நெறிமுறைகளும் ஆன்மீக வாழ்வின் உயர்வுக்கு வழி காட்டுவன எனும் போதிலும் நான்கும் ஒரு பாதையின் தொடர் நிலை யென எடுத்துரைப் போரும் உளர்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே" என

தாயுமானவர் உரைப்பதும் மேற்சுட்டிய கருத்திற்கு அரண் செய்வதாகின்றது. 14 மல பந்தங்களினின்று விடுபட்டுச் சிவனை அடைதலே வாழ்வின் பயன் எனக் கண்டோம். இதனையே மெய்கண்டதேவரும்,

"ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினையன்றே"

என எடுத்தாளவைத்தது.15 இங்கு அவனே தானேயாகிய அந்நெறி வழி ஏகனாகி நிற்றலுக்கு இறைபணி நிற்க என நுட்பமாக சுட்டிநிற்றல் காணலாம். மாயைமலமும் கன்மமும் ஆன்மாக்களை ஏகனாகி நிற்றலுக்குத் தடையாக வந்தமைகின்றன. ஆகாமியம் சஞ்சிதம், பிராரத்துவம் எனும் வினைத் தொகுப்பில் பிராரத்துவ வினையும் முயற்சியும் சிவனுடன் சேரவொட்டாது செய்யவல்லதோ எனும் சந்தேகத்தை எழுப்புகின்றது. இதற்கு அவன் அருளாலல்லது ஒன்றையும் செய்யானாகவே அஞ்ஞான கன்மம் பிரவசியாவாகலான் என்பதால் இறைவனைச் சேருதல் சாத்தியமென்பது மெய்கண்டார் வழிப்பெறப்படும். இங்கு மெய்கண்டார் இறைபணி வழுவாது நிற்றலுக்கு அழுத்தம் கொடுத்தமை அவ்வழி இறைவனை அடைதல் தன்மைக்கு உரமளிப்பதாகிறது. இறைபணியானது பற்றற்ற பாங்கில் அமைய வேண்டுவதாகும். கர்மத்துடன் பற்றுக்கள் இணைந்து விடுகின்றதரத்தில் அவை மலபந்தத் திற்கு இட்டுச் செல்லும் தரத்ததாகி விடுகின்றன. இதனாலேயே உய்யவந்த தேவர்,

"பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில் அப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராதென் றுந்தீபற"

என எடுத்தாளுகின்றார். இதே கருத்துச் சாயலானது திருமூலரின் திருவாக்கில்

"பற்றது பற்றிப் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்
பெறில் .........."

என அமைவதும் நோக்கத்தக்கதாகும்.

ஆன்மாக்களின் பக்குவநிலைக் கமைய இறைவனின் அருளும் அன்பும் வந்தமையும். இறைவனுடன் அத்துவிதமாய் கலக்கும் வகையில் இறைவன் இயல்பில் ஒன்றித்துப்போகும் தகைமை முத்திநிலைக் குரித்தாகின்றது. "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என மெய்கண்டார் எடுத்தாள்வதற்கமைய பார்க்கும் தன்மையுடைய கண்ணுக்குப் பொருட்களைக் காட்டும் மனம்போல இறைவன் பக்குவமுடையவர்களுக்கு அன்பின் காரணமாக அருள்புரிபவனாக அமைகின்றான்.18 சூரிய ஒளியைக் கொண்டு சூரியனைக் காண்பதுபோல அவனருளால் அவன் தாள் வணங்குவதும் சாத்தியமாகின்றது. இவ்வழியில் பேரின்ப நிலையெனும் சிவானந்ததினைக் கண்டுவக்கும் பெருநிலையைப் பெறவல்லவர்களாவர் எனச் சிந்தாந்தம் சித்திரித்து நிற்கின்றது. சித்தாந்தம் காட்டி நிற்கும் வாழ்க்கை வழி அன்புநிறைந்த வாழ்வாகவும் அறிவு நிறைந்த ஞான வாழ்வாகவும் அடக்கம் கலந்த இனிய வாழ்வாகவும் மிளிர்கின்றது. அறமாய், பூரணமாய் நிறைவாய் வாழ்வு மலர்ந்திருக்கும் தகைமையில் அமைதி, சாந்தி, திருப்தி என்பன நிறைவுற்று அமைகின்றன. மேலும் சித்தாந்தம் காட்டும் வாழ்வுப் பாதை பக்தி நிறைந்த ஞானம் கலந்த பண்பான வினைக்குரிய வாழ்வாகப் பூரணம் பெறுகின்றதெனலாம்.

# உசாத்துணை


01. **திருக்குறள்**, குறள் 131.

02. **திருஞானசம்பந்தர் தேவாரம்**, பஞ்சாக்கரத் திருப்பதிகம், செய்யுள் 1

03. **திருக்குறள்** – குறள் 7

04. இரத்தினநாயகர், பி (பதிப்பு), (1939) **ஔவையாரின் தனிப்பாடல் திரட்டு** சென்னை, ப. 26

05. அருணந்திசிவாச்சாரியார், (1971) **சிவஞானசித்தியார்** கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம். சுபக்கம் பாடல் 113.

06. **திருக்குறள்** – குறள் 7

07. சாமிநாத தேகிகேந்திர சிவயோகி (உரை) (1930) **பட்டினத்துப்பிள்ளைத் திருப்பாடற் றிரட்டும் பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பலும்**, சென்னை. பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், ப. 435

08. **திருஞானசம்பந்தர் தேவாரம்**, 3ம் திருமுறை திருப்புகலி திருவாவடு துறை 2ம் பாடல்.

09. **சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்** (1949) (பதிப்பு) திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடு. 7ம் திரு முறை, திருக்கேதாரம் செய்யுள் 1

10. **பரிபாடல்**, (1957) சென்னை எஸ். ராஜம் வெளியீடு. ப. 16

11. உமாபதிசிவாசாரியார், (1969) **சிவப் பிரகாசம்** திருநெல்வேலி. சென்னை. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். பாடல் 10.

12. **திருமந்திரம்** (1951) (பதிப்பு) திருப் பனந்தாள் காசிமடம். திருப்பனந் தாள் 270ம் பாடல்.

13. **சிவஞானசித்தியார்.**

14. தாயுமானசுவாமிகள், (1980) **தாயுமா னவர் பாடல்கள்** (பதிப்பு) திருச்சி. ராமகிருஷ்ண தபோவனம் திருப்ப ராத் துறை பராபரக்கண்ணி 157.

15. **சிவஞானபோதம்**, (1989) (பதிப்பு) சென்னை. சைவசித்தாந்தப் பெருமன்றம். சூத்திரம். 10.

16. **உய்யவந்ததேவர் திருவுந்தியார்** (1967 பதிப்பு) திருநெல்வேலி. சென்னை. சைவசிந்தாந்தம் நூற் பதிப்புக் கழகம். பாடல் 15

17. **திருமந்திரம்**, பாடல் 298

18. **சிவஞானபோதம்**, சூத்திரம் 12.